## தென்னை பயிர்செய்கைச் சபை

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தென்னை பயிர்செய்கைச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) கொடுக்கல் வாங்கல்களின் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 300,365,413 தொகையான இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள் மற்றும் ரூபா 82,806,449 தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகள் என்பன சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அதன் பிரகாரம் கணக்குகளில் அக் குறைபாடுகள் தொடர்பாக சீராக்கங்களைச் செய்து திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதற்கிணங்க மாதிரிகளுக்கு அப்பாலும் மேலும் கணக்கீட்டுக் குறைபாடுகள் இல்லாதிருக்கும் என்பதனை மறுக்கமுடியாதுள்ளது.

(ஆ) பல்வேறு செயற்திட்டங்களுக்காக சபைக்கு கிடைத்திருந்ததும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுவதுமான 02 வாகனங்களின் பெறுமதி கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் | |
| (I) நி.பி. 104(3) மற்றும் (4) | மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட 13 வாகன விபத்துக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | 06 மாதங்களுக்கு ஒருதடவை எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை செய்யப்பட வேண்டியபோதிலும் சபையின் 23 வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வு பரிசோதனை 1½ வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம் ரூபா 639,767,700 கூட்டுத்தொகையான அரசாங்கத்தின் மீண்டெழும் மற்றும் செஸ் மானியங்கள் என்பனவற்றைக் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டின் போது சபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 186,511,249 மிகையாக இருந்ததுடன் இதனோடொடுத்த முன்னைய ஆண்டின் ரூபா 662,597,042 கூட்டுத்தொகையான அரசாங்கத்தின் மீண்டெழும் மற்றும் செஸ் என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய மானியங்களை கணக்கிற்கு எடுத்துகொண்டதன் பின்னர் மிகை ரூபா 169,219,772 ஆக இருந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

### 2.2.1 நிதிசார் விளைவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின்போது சபையின் மொத்த வருமானங்களில் அரசின் மானியம் 80% ஆக இருந்ததுடன் ஏனைய வருமானம் 20% ஆக இருந்தது. முன்னைய ஆண்டின் அரசின் மானியம் மற்றும் ஏனைய வருமானங்கள் என்பன முறையே 91% மற்றும் 9% ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது சபையின் மொத்த மீண்டெழும் செலவில் நிவாரணம் மற்றும் விரிவாக்கல் சேவைகளுக்கான செலவினம் 53% ஆக இருந்ததுடன் செயற்பாட்டுச் செலவினம் 47% ஆக இருந்தது.

(இ) மீளாய்வாண்டில் மாதிரி தென்னந் தோப்புக்களின் செயற்பாட்டு விளைவு ரூபா 95,888,041 தேறிய இலாபத்தினை விளைவித்திருந்ததுடன் இதனோடு ஒப்பிடுகையில் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 55,086,699 ஆக இருந்தது. இதன் பிரகாரம் இலாபத்தில் அதிகரிப்பு ரூபா 40,801,342 ஆக இருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது உரப் பிரிவு ரூபா 2,172,797 பற்றாக்குறையை அடைந்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,899,933 ஆக இருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது கப்ருக செயற்திட்டத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 10,209,457 மிகையாகக் காணப்பட்டதுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,022,521 ஆகக் காணப்பட்டது.

**2.2.2 செயற்படு மூலதன முகாமைத்துவம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய முக்கியமான கணக்கீட்டு விகிதாசாரங்களில் சில கீழே தரப்படுகின்றன.

| | **மீளாய்வாண்டு** | **முன்னைய ஆண்டு** |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 29:1 | 7:1 |
| திரவச் சொத்து விகிதம் | 19:1 | 5:1 |

நிறுவனமொன்றின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை விகிதம் 2:1 விகிதமாகவும் திரவச் சொத்து விகிதம் 1:1 விகிதமாவும் காணப்பட வேண்டிய போதிலும் சபையின் நடைமுறை விகிதம் மற்றும் திரவச் சொத்து விகிதம் என்பன அசாதாரணமாக இருந்தமையால் நிதியத்தின் முகாமைத்துவத்தில் மதிநுட்பமுள்ள செயற்பாடுகள் எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

மீளாய்வாண்டின் போது ஒவ்வொரு செயற்பாடுகளினதும் இலக்குகளும் அதனை அடைந்துகொள்ளுதலும் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

**3.1.1 உதவுதொகை செலுத்துதல்**

சபையினால் மீளாய்வாண்டின் போது பல உதவுதொகை முறைகள் பேணப்பட்டு வந்ததுடன் ஆண்டின் இறுதியில் நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களின் இலக்குகளும் செயல்முன்னேற்றமும் பின்வருமாறு இருந்தன.

**(அ) புதிய/ மீள்நடுகை/ கீழ் பயிர்ச்செய்கை உதவுதொகை**

தேங்காய் புதிய/ மீள்நடுகை/ கீழ் பயிர்ச்செய்கையின் கீழ் 12,500 ஏக்கர்கள் பயிரிடப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் சபையின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 7,594 ஏக்கர்கள் பயிரிடப்பட்டிருந்தன. இதன் பிரகாரம், இதன் பௌதீகச் செயற்பாடு 61% ஆகக் காணப்பட்டது. பிராந்திய காரியாலய மட்டத்தில் ஆய்வு செய்யப்படுகையில், 09 பிராந்தியக் காரியாலயங்களில் 13% இற்கும் 49% இற்கும் இடையிலான ஆகக் குறைவான மட்டத்தில் செயலாற்றல் காணப்பட்டது.

“இந்நிகழ்ச்சித்திட்டம் 2011 ஆம் ஆண்டு முழுவதும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2011 ஏப்ரல் மாதத்தின்போது அந் நிகழ்ச்சித்திட்டம் திருத்தங்களுக்காக நிறுத்தப்பட்டிருந்ததுடன் சில மாதங்களின் பின்னரே மீள ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதனால் 12,500 ஏக்கர் இலக்கினை அடையும் நிகழ்ச்சித்திட்டம் ஆண்டு முழுவதும் அமுல்படுத்தப்படவில்லை” என தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

**(ஆ) புனர்வாழ்வு உதவுதொகை**

சபையினால் மீளாய்வாண்டின் போது 1.250 ஏக்கர் தென்னங்காணிகளை புனரமைப்பதற்காக ரூபா 03 மில்லியன் உதவுதொகை வழங்கப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. சபையின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ஆண்டின் இறுதிவரையில் 1,990 ஏக்கர்களுக்காக ரூபா 11.5 மில்லியன் உதவி வழங்கப்பட்டிருந்தது. அதன் பௌதீகச் செயலாற்றல் 159% ஆகும். இதற்குத் தேவையான ரூபா 7.5 மில்லியன் மேலதிக நிதிஏற்பாடு மண்நீர் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசன முன்னேற்றங்ளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதஏற்பாடுகளிலிருந்து வழங்கப்பட்டிருந்ததுடன் அந் நிகழ்ச்சித்திட்த்தின் கீழ் இலக்கிடப்பட்ட எதுவும் மீளாய்வாண்டில் அடையப்பட்டிருக்கவில்லை.

**(இ) கப்றுக்க புரவர வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை உதவுதொகை**

வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 133,900 தென்னங் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் சபையின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வருட இறுதியில் 47,850 தென்னங் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. இதன் பௌதீகச் செயலாற்றல் 36% ஆகும். பிராந்திய காரியாலய மட்டத்தில் ஆய்வு செய்யப்படுகையில், 09 பிராந்தியக் காரியாலயங்களில் செயலாற்றல் 0% உம், 04 பிராந்தியக் காரியாலயங்களில் 50% இற்குக் குறைவான செயலாற்றலும் காண்பிக்கப்பட்டிருந்தன. ‘‘தேசிய மட்டத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட திவ்நெகும நிகழ்ச்சித் திட்டம் மற்றும் சபையினால் அமுல்படுத்தப்பட்ட கப்புறுக புரவர வீட்டுத்தோட்ட உதவிகள் போன்ற இரண்டும் வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டமாகும். திவ்நெகும வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2 மில்லியன் கன்றுகள் அவசரமாக ஒதுக்குவதற்குத் தேவையேற்பட்டமையினாலும் திவ்நெகும நிகழ்ச்சித்திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டமையினாலும் சில பிராந்திய அலுவலகங்களில் செயலாற்றல் குறைவடைந்ததாக’’ தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

**(ஈ) கப்புறுகை சிப்னெனய் நிகழ்ச்சித்திட்டம்**

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 300,000 தென்னங் கன்றுகள் பகிர்ந்தளிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் சபையின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ஆண்டின் இறுதிவரையில் 265,956 தென்னங்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அதன் பௌதீக செயலாற்றல் 89% ஆக இருந்தது. பிராந்திய அலுவலகங்களின் நிலைமைகளைப் பரிசோதனை செய்த போது களுத்துறை பிராந்திய அலுவலகம் 48% செயலாற்றலைக் காட்டியது.

**(உ) சம்புத்தத்வ ஜயந்தி நிகழ்ச்சித்திட்டம்**

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 50,000 தென்னங் கன்றுகளைப் பகிர்ந்தளிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் சபையின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ஆண்டின் இறுதி வரையில் 31,943 தென்னங்கன்றுகளே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அதன் பௌதீக செயலாற்றல் 64% ஆக இருந்தது. பிராந்திய அலுவலகங்களின் நிலைமைகளைப் பரிசோதனை செய்த போது 03

பிராந்திய அலுவலகங்களின் செயலாற்றல் 8% இற்கும் 42% இற்கும் இடையிலான மட்டத்தில் காணப்பட்டது.

**(ஊ) உபபயிர் பயிர்ச்செய்கை உதவி**

செயல் நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது புதிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உபபயிர் பயிர்ச்செய்கை தொடர்பாக அறிவுறுத்தும் 15 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் எவ்வித நிகழ்ச்சித்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்தினைப் பயன்படுத்தி உபபயிர் பயிர்ச்செய்கை உதவியின் கீழ் இலக்கிடப்பட்ட 20,000 ஏக்கரில் 106 ஏக்கருக்காக ரூபா 813,505 உதவிப் பணம் வழங்கப்பட்டிருந்தது.

**(எ) மாட்டுத் தொழுவங்களுக்கான உதவி**

புதிய நிகழ்ச்சித்தட்டதின் கீழான தென்னங் காணிகளில் மிருகவளர்ப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முழுமையாக ஐந்து மிருக வளர்ப்புப் பிரிவுகள் ஸ்தாபிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது எவ்வித மிருக வளர்ப்பு பிரிவும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த பணம் உபயோகிக்கப்பட்டு மாட்டுத் தொழுவங்களுக்கான உதவியின் கீழ் இலக்கிடப்பட்ட 660 மாட்டுத் தொழுவங்களில் 75 மாட்டுத் தொழுவங்களுக்காக ரூபா 1.9 மில்லியன் உதவிப் பணம் வழங்கப்பட்டிருந்தது.

### 3.1.2 மாதிரி தென்னந் தோப்பு

2011 ஆம் ஆண்டின் போது மாதிரி தென்னந்தோப்புக்களாக 10 தோப்புக்களும் மாதிரி நிலையங்களாக 02 தோப்புக்களும் சபையினால் முகாமைத்துவம் செய்யப்பட்டிருந்தன. மேற்கூறிய தென்னந் தோப்புக்கள் மற்றும் மாதிரி நிலையங்கள் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2011 ஆம் ஆண்டின் தென்னை விளைச்சல் தொடர்பான சில தரவுகள் கீழே தரப்படுகின்றன.

| மாதிரி தென்னந் தோட்டம்/மாதிரி நிலையம் | பயிரிடப்பட்டுள்ள காணியின் அளவு (ஏக்கர்) | விளைச்சல் தரும் மரங்களின் எண்ணிக்கை | பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை | விழுந்த தேங்காய்களின் எண்ணிக்கை | வருடாந்த விளைச்சல் தேங்காய்கள் | விழுந்த தேங்காய்களின் சதவீதம் | மரத்தின் வருடாந்த சராசரி மதிப்பீட்டு காய்கள் | ஏக்கருக்கான விளைச்சல் காய்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாகன்சோல | 347 | 15,274 | 638,944 | 339,532 | 978,476 | 35 | 64 | 2,820 |
| ரன்தெனிய | 311 | 12,990 | 542,567 | 337,910 | 880,477 | 38 | 68 | 2,831 |
| லேனாவ | 416 | 11,190 | 851,552 | 126,578 | 978,130 | 13 | 87 | 2,351 |
| போபிடிய | 104 | 4,754 | 206,905 | 120,939 | 327,844 | 37 | 69 | 3,152 |
| கேர்ட்லன்ட் | 388 | 16,154 | 438,743 | 217,869 | 656,612 | 33 | 41 | 1,692 |
| கொரேய் | 173 | 5,423 | 171,275 | 19,435 | 190,710 | 10 | 35 | 1,102 |
| பாசிகுடா | 47 | 3,001 | 146,221 | 14,188 | 160,409 | 9 | 23 | 3,420 |
| மஹயாய | 185 | 11,550 | 635,585 | 274,935 | 910,520 | 30 | 79 | 4,915 |
| டேசிவெலி | 299 | 14,308 | 556,612 | 332,396 | 889,008 | 37 | 62 | 2,975 |
| முந்தல் | 14 | 710 | 53,742 | 8,142 | 61,884 | 13 | 87 | 4,343 |
| கொஹொபான | 82 | 3,776 | 124,804 | 61,099 | 185,903 | 33 | 49 | 2,267 |
| புளை | 81 | 4,548 | 100,230 | 10,381 | 110,611 | 9 | 24 | 1,366 |
| மொத்தம் | **2,447** | **103,678** | **4,467,180** | **1,863,404** | **6,330,584** | **29** | **61** | **2,587** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டின் மொத்த தேங்காய் விளைச்சல் 6.33 மில்லியன் தேங்காய்களாகும். இதனை முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்தபோது 6.7% அதிகரிப்பாக இருந்தபோதிலும் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11% ஆன குறைவாகும்.

(ஆ) வழமையான நிலையின் கீழ் தென்னம் பயிர்ச்செய்கைக்கான ஒரு ஏக்கர் காணியில் இருந்து வருடாந்தம் ஆகக் குறைந்தது 4500 – 5000 இற்கு இடையிலான தேங்காய்களின் விளைச்சலைப் பெற்றிருக்கக் கூடிய போதிலும் ஒட்டுமொத்தமாக சபைக்குச் சொந்தமான தென்னந் தோப்புக்களில் மஹயாய மற்றும் முந்தல் தவிர ஏனைய மாதிரி தென்னந் தோப்புக்களில் இருந்து அவ் வழமையான மட்டத்தையேனும் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(இ) மாதிரித் தென்னந் தோப்புக்களாகப் பராமரிக்கப்படுகின்ற 12 தென்னந்தோப்புகளில் பாசிக்குடா, பளை, கொரை, கெட்லண்ட் மற்றும் கொஹொம்பான போன்ற ஆறு தென்னந் தோப்புக்களில் வருடாந்த சராசரி விளைச்சல் 50 காய்களைவிட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஈ) ரந்தெனிய, டேசிவெலி, போப்பிட்டிய, நாகன்சோலை, கெட்லண்ட், கொஹொம்பான மற்றும் மஹயாய போன்ற தென்னந் தோப்புக்களில் விழுந்த தேங்காய்களின் சதவீதம் 30% இற்கும் 38% இற்கும் இடையிலான மிகவும் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தமையினால் விளைச்சல் சில காலமாக ஏற்பட்டிருக்கவில்லை.

### 3.1.3 நீர்கொழும்பு விதைத் தேங்காய் பிரிவு

சபை தென்னைப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தில் 2011 ஆம் ஆண்டின் போது 04 மில்லியன் தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்து 61,538 ஏக்கரில் தென்னைப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு இலக்கிட்டிருந்தது. தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான விதைத் தேங்காய்களை வழங்கும் செயற்பாடுகளைப் பரிசோதனை செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நாட்டின் பயிர்ச்செய்கைச் செயற்பாடுகளுக்குத் தகுதியான தேங்காய் வழங்கும் செயற்பாட்டிற்காக சபைக்குச் சொந்தமாக நீர்கொழும்பு விதைத் தேங்காய் பிரிவு உருவாக்கப்பட்டிருந்தது. நாட்டின் வருடாந்த விதைத் தேங்காய்களின் தேவைகளை இனங்கண்டு அதனைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவான தாய் மரங்கள் மற்றும் வளர்ச்சியான மரங்களின் தொகுதியொன்றைப் பேணுவது இதன் அடிப்படைச் செயற்பாடாக இருந்த போதிலும் 2008 ஆம் ஆண்டின் பின்னர் தாய்மரங்கள் மற்றும் வளர்ச்சியான மரங்களின் தொகுதியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அவ்வாறே 2011 ஆம் ஆண்டில் 04 மில்லியன் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்யும் நிகழச்சித்திட்டத்தின் போது அதற்குத் தேவையான விதைகளில் 3,152,728 விதைத் தேங்காய்கள் தாய் மரங்கள் மற்றும் வளர்ச்சியான மரங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.1.4 கப்றுக்க கடன் முதலீட்டு முறைமை

பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் அடிப்படையிலான வணிக விவசாயக் கைத்தொழிலை தென்னைப் பயிர்ச் செய்கையில் ஏற்படுத்துவதன் மூலம் தென்னைப் பயிர்ச்செய்கைப் பிரதேசத்தில் இயலுமான அளவில் வணிகச் சூழலை ஏற்படுத்துதல் மற்றும் அதனூடாக தென்னைப் பயிர்ச்செய்கைகளில் நிலையான அபிவிருத்தி மற்றும் அதனூடாக பொருளாதார பங்களிப்பினை உயர்த்துவது இக்கடன் முதலீட்டு முறைமையின் நீண்டகால நோக்கமாகும். தற்போது ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கருக்கு ரூபா 75,000 படி வழங்கப்படுகின்ற கடன் பணம் ரூபா 1,000,000 தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டு 13 ஏக்கருக்கு மேற்பட்ட 28,198 காணிச் சொந்தக்காரர்களுக்கு இந்த உத்தேச முறைமையில் உள்ளாகும் சந்தர்ப்பங்கள் உரித்தற்றிருந்ததன் அடிப்படையில் மேற்கூறப்பட்ட நோக்கங்களை சபையினால் அடைவதற்கு முடியாதிருந்தது. எவ்வாறாயினும் 2011 நவம்பர் 25 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது மேற்கூறப்பட்ட உயர் கடன் எல்லை ரூபா 2 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

### 3.1.5 தென்னை அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் ஊடாக தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கும் சபையின் உள்ளகப் பதவியணியினருக்கும் பொருத்தமான பயிற்சியொன்றை வழங்கும் நோக்கத்தில் மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்ட 63 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற 10 நிகழ்ச்சித்திட்டங்களில் எவ்வித செயலாற்றல்களும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையத்தின் மேற்பார்வையின் கீழ் பிராந்திய அலுவலகங்களின் ஊடாக அமுல்படுத்தப்பட்டிருந்த 3 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் செயல்முன்னேற்றம் 44% இனை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சபையின் தேவைப்பாடுகள் மற்றும் அமைச்சின் கொள்கைகளின் அடிப்படையில் மாற்றமடையக்கூடியதாக இருந்தது என தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3.2 தாமதமான செயற்திட்டங்கள்

ஒப்பந்தத்தின் பிரகாரம் கப்றுக்க கடன் முதலீட்டு முறைமைக்காக ரூபா 8 இலட்சம் பெறுமதியான 6 மொடியூல்களையுடைய கணனி பொதி ஒன்று வடிவமைக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தும் அதில் 3 மொடியூல்கள் மாத்திரமே பூர்த்தியடைந்திருந்தது. இதற்காக மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 4 இலட்சம் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.3 வேறு நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்திக்கு முரணாக சபையின் 05 ஊழியர்கள் வரிசை அமைச்சின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களின் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,540,500 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்திக்கு முரணாக சபைக்குச் சொந்தமான 2 வாகனங்கள் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக சபையினால் ரூபா 355,636 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.4 பதவியணியினர் நிருவாகம்

சபையின் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினரின் விபரம் கீழே தரப்படுகின்றன.

| தரம் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளவாறானவை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஸ்ட நிலை | 48 | 22 | 26 |
| மூன்றாம் நிலை | 84 | 50 | 34 |
| இரண்டாம் நிலை | 476 | 332 | 144 |
| ஆரம்ப நிலை | 151 | 121 | 30 |
| | 759 | 525 | 234 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையிடம் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகள் காணப்படவில்லை.

(ஆ) செயன்முறைச் செயற்பாடுகளுக்குரிய 234 பதவிகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) மனிதவளம்
(இ) வாகனப் பயன்பாடு
(ஈ) உதவு தொகை
(உ) விதைத் தேங்காய்
(ஊ) பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்